**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 165/2024** Date: 30.12.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 18** |
| Name | : | ரூத் |
| Father's Name | : | ஜேம்ஸ்பாபு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பன்னவாடியன்காடு நாகமரையில் குடியிருந்துக்கொண்டு வருகிறேன். எனது பெயரில் எந்த நிலமும் இல்லை. எனது அப்பா மாது பெயரில் பன்னவாடியன்காட்டில் 2 1/4 நிலம் உள்ளது. விவசாய நிலம் வைத்திருப்பவர்களுக்கு பணம் கிடைப்பதாக சொல்லி எனது பெயரில் விண்ணப்பதிருந்தேன். அந்த திட்டத்தின் கீழ் ரூ.2,000/- எனது தமிழ்நாடு கிராம வங்கி நெருப்பூர் கிளையில் உள்ள கணக்கிற்கு இரண்டு தவணை வரவு வைக்கப்பட்டது. அதன்பின்னிட்டு எந்த தவணையும் வரவில்லை. எனது பெயரில் நிலம் எதுவும் இல்லாததால் அந்த பணத்தை திரும்ப செலுத்துமாறு கூறியிருந்தார்கள். நான் எனது வங்கி கணக்கில் போதுமான இருப்பு வைத்திருந்ததால் அந்த பணத்தில் அவர்களாகவே எடுத்துக்கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் எனது வங்கி கணக்கின் பணபரிவர்த்தனை பட்டியலில் எனது வங்கி கணக்கிற்கு ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டது காண்பிக்கப்பட்டது. **மேற்படி 02.04.2020 முதல் 09.11.2020 வரையிக்கான பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.17 ஆகும்.** இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

எங்களது நிலம் எனது தாத்தா பெயரில்தான் உள்ளது. இன்னும் பாகபிரிவினை ஏற்படவில்லை. வாய்மொழியாக ஒப்புக்கொண்டதின் பெயரில் எங்களுக்கான நிலத்தை ஓட்டிவருகிறோம். நான் பென்னாகரம் வேளாண்அலுவலம் மூலமாக விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். நான் எந்தபொரு தனிப்பட்ட நபர் மூலமாகவும் விண்ணப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.12.30 18:10:28 +0530

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 165/2024** Date: 30.12.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 17** |
| Name | : | சரவணன் |
| Father's Name | : | ராஜி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாப்பாரப்பட்டியில் குடியிருந்துக்கொண்டு பெங்களூரில் தனியார் ஐடிநிறுவனத்தில் சமையல்வேலைசெய்து வருகிறேன். எனது பெயரில் 35 சென்ட் நிலம் அ.பாப்பாரப்பட்டி கிராமத்தில் இருந்தது. விவசாய நிலம் வைத்திருப்பவர்களுக்கு பணம் கிடைப்பதாக சொல்லி எனது பெயரில் விண்ணப்பதிருந்தேன். அந்த திட்டத்தின் கீழ் ரூ.2,000/- எனது பாரதி ஸ்டேட்வங்கி பாப்பாரப்பட்டி கிளை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. அதன்பின்னிட்டு எந்த தவணையும் வரவில்லை. எனக்கு 40 சென்ட்ற்கு குறைவாக நிலம் இருந்ததால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மேற்படி ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டதையும் அவர்களாகவே பிடித்தம் செய்துவிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் எனது வங்கி கணக்கின் பணபரிவர்த்தனை பட்டியலில் எனது வங்கி கணக்கிற்கு ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டது காண்பிக்கப்பட்டது. **மேற்படி 01.04.2020 முதல் 30.12.2020 வரையிக்கான பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.16 ஆகும்.** இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் வேளாண்துறை அலுவலகத்தில்தான் விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். விண்ணப்பபித்தற்காக தனிநபர் மூலமாக நான் அணுகவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.12.30 18:10:36 +0530

**<u>DEPOSITION OF WITNESS</u>**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 165/2024** Date: 30.12.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 16** |
| Name | : | ருமேஷ் |
| Father's Name | : | சரவணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பாப்பாரப்பட்டியில் குடியிருந்துக்கொண்டு ஓசூரில் தனியார் நிறுவனத்தில் வேலைசெய்து வருகிறேன். எனது பெயரில் எந்த விவசாய நிலமும் இல்லை. எனது அம்மா தேன்மொழி பெயரில் பெரியூரில் 02 ஏக்கர் நிலம் உள்ளது. எனது மாமா அண்ணாமலை என்பவர் விவசாய நிலம் வைத்திருப்பவர்களுக்கு பணம் கிடைப்பதாக சொல்லி எனது பெயரில் விண்ணப்பதிதிருந்தார். அந்த திட்டத்தின் கீழ் ரூ.2,000/- எனது இந்தியன் வங்கி பாப்பாரப்பட்டி கிளை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. அதன்பின்னிட்டு எந்த தவணையும் வரவில்லை. மேற்படி ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டதையும் அவர்களாகவே பிடித்தம் செய்துவிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் எனது வங்கி கணக்கின் பணபரிவர்த்தனை பட்டியலில் எனது வங்கி கணக்கிற்கு ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டது காண்பிக்கப்பட்டது. **மேற்படி 01.04.2020 முதல் 31.12.2020 வரையிக்கான பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.15 ஆகும்.** இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது அம்மா பெயரில் நிலம் உள்ளது. எனது அம்மாவை தேன்மொழி என்றும் திருமணத்திற்கு முன்னதாக தனலட்சுமி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். எனது அம்மா பெயரில் மாற்றம் பெற்றுள்ளதால் எனது அம்மா பெயரில் விண்ணப்பிக்க முடியாது என்று என் பெயரில் விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். நான் பாப்பாரப்பட்டி

வேளாண்துறை அலுவலகம் மூலமாக விண்ணப்பித்திருந்தேன் என்றால் சரிதான் வேளாண் அலுவலர் மூலமாக விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைத்தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.12.30 18:11:13 +0530

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 165/2024** Date: 30.12.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 15** |
| Name | : | நித்யா |
| Father's Name | : | அண்ணாமலை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது பிக்கிலிபெரியூரில் குடியிருந்துக்கொண்டு மலையூர் அங்கன்வாடி மையத்தில் சமையல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது பெயரில் எந்த விவசாய நிலமும் இல்லை. எனது கணவர் பெயரில் பிக்கிலிபெரியூரில் 4 ஏக்கர் நிலம் உள்ளது. என் கணவர் எனக்கு சொல்லாமல் விவசாய நிலம் வைத்திருப்பவர்களுக்கு பணம் கிடைப்பதாக சொல்லி விண்ணப்பத்திருந்தார். அந்த திட்டத்தின் கீழ் ரூ.2,000/- எனது வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. அதன்பின்னிட்டு எந்த தவணையும் வரவில்லை. மேற்படி ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டதையும் அவர்களாகவே பிடித்தம் செய்துவிட்டார்கள். நான் இந்தியன் வங்கி பாப்பாரப்பட்டி கிளையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் எனது வங்கி கணக்கின் பணபரிவர்த்தனை பட்டியலில் எனது வங்கி கணக்கிற்கு ரூ.2,000/- வரவு வைக்கப்பட்டது காண்பிக்கப்பட்டது. (**மேற்படி 01.04.2023 முதல் 31.12.2020 வரையிக்கான பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.14 ஆகும்**). இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரணையின்போதும் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.12.30 18:11:24 +0530